**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 55of 2022**

Prosecution witness LW2 (PW4) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 01.08.2024 in accordance wigh provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மனோகரன் | Father Name | : | பாலாஜி |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused present**

**முதல் விசாரணை:**

நான் மிட்டபள்ளி கிராமத்தில் வசிக்கிறேன் . நான் கிரானைட் கல் வண்டி டிரைவராக வேலை செய்கிறேன் . எனக்கு திலிப்குமார் ஸ்ரீபிரதிஷ் , ரஷித் ஆகியோர் நண்பர்கள் . என்னுடைய நண்பர் திலிப்குமார் தற்போது ஆஜரில் உள்ளார் . நாங்கள் பிரியாக இருக்கும்போது சரக்கு அடிக்க போவோம். நாங்கள் நான்கு பேரும் சரக்கு அடிக்கபோவோம் . ஓரப்பத்தில் உள்ள ஒயின்சாப்பில் போய் சரக்கு அடிப்போம் . 27.10.2021ம் தேதி சாயங்காலம் 4.30–5.00 மணிக்கு திலிப்குமார் , ரஷீத், ஸ்ரீபிரதிஷ் நான் ஆகியோர் ஓரப்பம் ஒயின்சாப்பிற்கு போனோம்.

அன்றைய தினம் சரக்கு திலிப்குமார் வாங்கினார் . அந்த ஓரப்பம் ஒயின்சாப்பிற்கு எதிர்தாப்பில் உள்ள கிணற்று பக்கத்தில் உட்கார்ந்து நாங்கள் குடித்தோம் . அந்த கிணறானது ஆறுமுகம் என்பவருக்கு சொந்தமான கிணறு ஆகும். அப்போது திலிப் எப்போதும் நானே சரக்கை வாங்கித்தருகிறேன் என்று சொன்னார் . அதற்கு ரஷீத் , திலீப்குமாரை பார்த்து இன்னிக்கு வாங்கிகொடு , நாளைக்கு நான் வாங்கித்தருகிறேன் என்று சொல்லி அசிங்கமாக சொல்லி தேவடியா பையா, கண்டரஒலி பையா என்று ரஷீத் திட்டினார் . திலிப்குமார் பேசி, ரஷீத்–ம் பேசி அவர்களுக்குள் சண்டை ஆகிவிட்டது. அப்போது திலிப்குமார் ரஷீத் நெஞ்சின்மீது கையை வைத்து தள்ளியபோது ரஷீத் கிணற்றுக்குள் விழுந்துவிட்டார்.

அப்போது ஸ்ரீபிரதிஷ் கிணற்றுக்குள் படிகட்டு வழியாக இறங்கிபார்த்தார். இருட்டாக இருந்ததால் ஒன்றும் தெரியவில்லை . அதன்பிறகு ஸ்ரீ மேலே வந்துவிட்டார் . அதன்பிறகு திலிப்குமார் நான் கிளம்புகிறேன் என்று சொல்ல அவரின் பைக்கை எடுத்துக்கொண்டு ஒயின்சாப் வழியில் அவர் கிளம்பிவிட்டார் . ஸ்ரீ, நான் ஆகியோர் பைக் சென்ற எதிர்புறத்தில் நாங்கள் போய்விட்டோம். அதன்பிறகு நாங்கள் நைட் வீட்டிற்கு போய்விட்டோம். அடுத்த நாள் காலை நானும் „ ஸ்ரீபிரதிஷ்-ம் சிவகாமி காலேஜ் பக்கத்திலுள்ள டீகடைக்கு வந்திருந்தோம் . அப்போது ஸ்ரீபிரதிஷ்ற்கு அவருடைய அண்ணன் போன் செய்தார்.

அதன்பிறகு அங்குவந்த போலிஸ் ஜீப்பில் என்னையும் ஸ்ரீபிரதிஷ் அழைத்துசென்றுவிட்டார்கள். எங்களை போலிசார் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்கள் . அங்கு ரஷீத் பாடியை பார்த்தோம். என்ன நடந்தது என்று போலிசார் கேட்டார்கள் நான் என்ன நடந்தது என்ற விவரத்தை சொன்னேன் . போலிசார் விசாரித்தபிறகு என்னை கிருஷ்ணகிரி நீதிமன்றத்தில் என்னையும் , ஸ்ரீபிரதிஷ்-யும் ஜட்ஜ் முன்னிலையில் விசாரித்தார்கள் . ஜட்ஜிடம் இப்போது சொன்ன இதே விவரத்தை சொன்னேன்.

தற்போது காண்பிக்கப்படும் ஆவணங்களில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். அந்த 164 கு.வி.மு.ச வாக்குமூலம் அ.த.சா.ஆ.7 ஆகும். நாங்கள் சம்பவ இடத்திற்கு மாலை 4.45 மணிக்கு போனோம். இந்தசம்பவம் அதிலிருந்து கால் மணி நேரத்திலிருந்து அரைமணி நேரத்திற்குள் நடந்தது . போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

ரஷீத், திலிப்குமார், ஸ்ரீபிரதிஷ் ஆகியோர் சுமார் 4 வருடங்களாக பழக்கம். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னையும் ஸ்ரீபிரதிஷ் -ம் ஒருநாள் ஸ்டேசனில் வைத்து விசாரித்தார்களா என்றால் அடுத்தநாள் 2 மணி நேரம் மட்டும் என்னை விசாரித்தார்கள் . என்னை விசாரிக்கும்போது போலிஸ் ஸ்டேசனில் வேறு யார் இருந்தார்கள் என்று சொன்னால் இன்ஸ்பெக்டர் மேடம் இன்னொரு போலிஸ் இருந்தார்கள். எங்களை

போலிசார் விசாரிக்கும்போது ஸ்ரீபிரதிஷ் அண்ணா அங்கிருந்தாரா என்று சொன்னால் நாங்கள் போனபிறகுதான் அவருடைய அண்ணன் அங்கு வந்தார்.

திலிப்குமார் மீது வழக்கு போடப்பட்ட விவரம் எப்போது தெரியவந்தது என்று சொன்னால் அடுத்த நாள் காலை போலிசார் எங்களை ஜீப்பில் ஏற்றும்போது தெரியவந்தது. திலிப் மீது வழக்கு போட்டுள்ள விவரம் யார் சொன்னார்கள் என்று சொன்னால் ஸ்ரீபிரதிஷ் -ன் அண்ணாதான் போன் மூலம் சொன்னார். சம்பவம் நடந்தபோது அந்த இடம் இருட்டாக இருந்தது என்றும் அது விவசாய நிலம் என்றால் சரிதான் . இதற்கு முன்பு நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்ததாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . எனக்கு எழுதப்படிக்க தெரியும் . மேற்படி 164 கு.வி.மு.ச வாக்குமூலத்தில் நாங்கள் என்ன சத்தம் என்று கேட்டவுடன் ரஷீத் கிணற்றுக்குள் விழுந்துவிட்டதாக திலிப்குமார் சொன்னதாக நான் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

5 நிமிடத்தில் தள்ளிவிட்டு போய்விட்டார். திலிப்-ம், ரஷீத-ம் சண்டை போடும்போது நானும் , ஸ்ரீபிரதிஷ்-ம் சுமார் 10-15 அடி தொலைவில் இருந்தோம். கிணற்றுக்குள் விழுந்த சத்தம் கேட்டு நாங்கள் கிணற்றிற்குள் எட்டிபார்த்தோம் என்றால் சரிதான் . பொதுவாக தள்ளுமுள்ளு நடக்கும்போது யாருடைய தவறினால் கீழே மற்றொரு நபர் விழுகிறார் என்று பொதுவாக சொல்லமுடியாது என்று சொன்னால் சரிதான். எனக்கு தெரிந்து திலிப்பிற்கும், ரஷீத்திற்கும் ஏதும் முன்விரோதம் இல்லை என்று சொன்னால் அன்றுதான் விரோதம் ஏற்பட்டது . போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரணை மேற்கொள்ளவில்லை என்று சொன்னால் அடுத்த நாள் காலை விசாரணை மேற்கொண்டார்கள்.

2 மணிநேரம் போலிசார் எங்களை விசாரித்தபோது ஸ்ரீபிரதிஷ் -ஐ போலிசார் அடித்தார்கள் என்று சொன்னால் அவ்வாறு ஏதும் அடிக்கவில்லை. போலிசார் மிரட்டினார்களா என்று சொன்னால் மிரட்டவில்லை. நடந்ததை சொல்லுமாறு சொன்னார்கள். நான் சம்பவ

இடத்திற்கு போகவில்லை என்றும் , சம்பவ இடத்தில் திலிப் -ம், ரஷீத்-ம் சண்டை போட்டதை நேரில் பார்த்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் அது தவறு . நானும், பிரதிஷ்-ம் தவறான தகவல்களை போலிசாரிடம் சொல்லி திலிப்பை இந்த வழக்கில் சிக்கவைத்துள்ளோம் என்று சொன்னால் அது தவறு.

ரஷீத் இறந்ததற்கும் , திலிப்-ற்கும் எந்த சம்பந்தம் இல்லை என்று சொன்னால் இவர்கள் இரண்டுபேர் சண்டை போட்டார்கள் அதனால் சம்பந்தம் இல்லை என்று சொல்லமுடியாது . ரஷீத் தானாகவே கிணற்றில் விழுந்து இறந்துவிட்டார் என்றும் திலிப் அவரின் இறப்பிற்கு காரணமில்லை என்றும், ரஷீத் இறப்பிற்கு திலிப்பை காரணம் காட்டி எங்களை போலிசார் சாட்சியாக போட்டுள்ளார்கள் என்று சொன்னால் அவர்தான் கிணற்றில் தள்ளிவிட்டார். என்னை போலிசார் வழுக்கட்டாயமாக மிரட்டி இவ்வழக்கில் சாட்சியம் சொல்லவைத்துள்ளார்கள் என்று சொன்னால் அது தவறு.

நீதிமன்றத்தில் 164 கு.வி.மு.ச வாக்குமூலம் கொடுக்கும்போதும் என்னை வழுக்கட்டாயமாக போலிசார் வாக்குமூலம் கொடுக்குமாறு வற்புறுத்தினார்கள் என்று சொன்னால் அது தவறு . நான் இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது தவறு.

V DAMODARAN

Additional District Judge

Digitally signed by V DAMODARAN

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 55of 2022**

Prosecution witness LW8 (PW5) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 01.08.2024 in accordance wigh provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | வரதராஜ் | Father Name | : | பெருமாள் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused present**

**முதல் விசாரணை:**

நான் மிட்டபள்ளி கிராமத்தில் வசிக்கிறேன் . நான் விவசாய வேலை செய்கிறேன். தில்பாஷா –ற்கு இரண்டு மகன்கள் . முதல்மகன் பெயர் கலந்தர். 2 வது மகன் பெயர் ரஷீத் . 27.10.2021 ல் நான் என் வீட்டில் இருந்தேன். அன்று இரவு 8.00 மணிக்கு ஊரில் ரஷீத் கிணற்றில் விழுந்துவிட்டதாக ஊரில் பேசிக்கொண்டார்கள் . அதன்பிறகு ஒரப்பத்திலுள்ள ஆறுமுகம் கிணற்றிற்கு இரவு 8.00 மணிக்கு கேள்விப்பட்டவுடன் போய்விட்டோம். ஊர்க்காரர்கள் சொன்னவுடன் தகவல் தெரிந்து அந்த கிணற்றில் சென்று பார்த்தோம்.

தீயணைப்பு துறையினர் அந்த பாடியை எடுத்து வெளியே போட்டிருந்தார்கள். அப்போது சுற்றி 10 நபர்கள் இருந்தார்கள். அந்த பாடியை திருப்பிபோட்டபோது தலையில் பலத்தகாயம் ஏற்பட்டதாக சொன்னார்கள் . அதன்பிறகு விஏஓ, போலிசார் வந்தார்கள். அதன்பிறகு ஆம்புலன்ஸ் வந்து பாடியை ஜி.எச்–ற்கு எடுத்துச்சென்றார்கள். ரஷீத்–ற்கு எப்படி அடிப்பட்டது என்ற விவரத்தை நான் பார்க்கவில்லை . அவர் கிணற்றில் விழுந்துவிட்டதாக நான் கேள்விப்பட்டேன் . 28.10.2021 காலை போஸ்மாடம் செய்தார்கள்.

நான் ஜி .எச் மருத்துவமனைக்கு காலை 9.00–10.00 மணிக்கு போயிருந்தேன். என்னுடன் 4–5 நபர்கள் வந்திருந்தார்கள். அப்போது

போலிசார் என்ன நடந்தது என்று கேட்டார்கள் . இப்போது சொன்ன விவரத்தை சொன்னேன். ரஷீத்-டன் யார் நண்பர்கள் வந்தார்கள் என்ற விவரம்தெரியாது. நான் தகவல் தெரிந்துதான் போனேன்.

சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி, அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.

தற்போது ஆஜரிலுள்ள எதிரி எங்கள் ஊரை சேர்ந்த திலிப்குமார் ஆவார். திலிப்குமார் ரஷீத் மனோகரன் ஸ்ரீபிரதிஷ் ஆகியோர் நான்கு நபர்களும் நண்பர்கள் என்றும் அடிக்கடி மது அருந்துவதற்காக ஒரப்பம் ஒயின்சாப்பிற்கு வருவது வழக்கம் என்று சொன்னால் அதுப்பற்றி தெரியாது. 27.10.2021 அன்று திலிப்குமார் ரஷீத் மனோகரன் மற்றும் ஸ்ரீபிரதிஷ் ஆகியோர் ஆறுமுகம் என்பவர் கிணற்றிற்கு அருகே மது அருந்திக் கொண்டிருந்தபோது ரஷீத்திற்கும் திலிப்குமாருக்கும் எற்பட்ட தகராறில் ரஷீத்-ஐ திலிப்குமார் கிணற்றில் தள்ளி ரஷீத்திற்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இறந்துவிட்டார் என்றும் இந்த விவரங்கள் அங்கு போனபோது அங்கு இருக்கும் நபர்களை கேட்டு தெரிந்துக்கொண்டேன் என்றும் இந்த தகவல்களை நான் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு எதிரி எங்கள் ஊரை சார்ந்தவார் என்பதால் அந்த தகவல்களை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது தவறு

**குறுக்கு விசாரணை**

போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான் . நான் போய் பார்க்கும்போது இன்ஸ்பெக்டர் விஏஓ இருந்தார்கள். விஏஓ-டம் இன்ஸ்பெக்டர் புகார் கொடுக்கும்படி சொன்னார் என்றால் அதைஎல்லாம் நான் பார்க்கவில்லை . நான் போகும்போது விஏஓ அந்த இடத்தில் இருந்தார்.

V DAMODARAN

Additional District Judge
Digitally signed by V DAMODARAN